ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2248/37 - 2021 ඔක්තෝබර් මස 06 වැනි බදාදා - 2021.10.06
*2248/37 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 2/1976* (iii)

### *1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க இலங்கைத் தேயிலைச் சபை சட்டம்*

*1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபை சட்டத்தின் பிரிவுகள் 4 (1) மற்றும் 8 (1) உடன் சேர்த்து வாசிக்கப்படும் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டதும் பெருந்தோட்ட அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள்.*

ஜயம்பதி மொல்லிகொட,
தவிசாளர்,
இலங்கைத் தேயிலைச் சபை.

கொழும்பு,
*2021,* செத்தெம்பர் *10.*

### ஒழுங்குவிதிகள்

*1.* இவ்வொழுங்குவிதிடின் *2021* ஆம் ஆண்டின் இலங்கைத் தேயிலைச் சபை (தேயிலை பற்றிய பகுப்பாய்வு மற்றும் சான்றுப்படுத்துகை) ஒழுங்குவிதிடின் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைத் தேயிலைச் சபையானது பகுப்பாய்வு மற்றும் தரச் சான்றுப்படுத்துகை நோக்கத்துக்காக தயாரிக்கப்பட்ட தேயிலைகள் மற்றும் வேறு வகையினவான தேயிலை உற்பத்திப் பொருட்கள் பற்றிய நிலைநாட்டப்பட்ட முறைகளை பயன்படுத்தி விஞ்ஞான ரீதியிலான பரீட்சிப்புமுறையை நிறைவேற்றுவதற்கு அவசியமான பரீட்சிப்புகள் மற்றும் வேறு வசதிகளுடன் சாதனமயப்படுத்தப்பட்ட (இதனகத்துப்பின்னர் "ஆய்வுகூடம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பகுப்பாய்வு சார்ந்த ஆய்வுகூடமொன்றை தாபித்துப் பேணுதல் வேண்டும்.


*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. சபையானது அதன் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் ஒன்றுக்கு ஆய்வுகூடத்தில் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாக இருக்கக் கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

4. சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள், தேயிலைத் தொழிற்சாலை ஒன்றிற்கு அல்லது தேயிலை களஞ்சியப்படுத்துகின்ற வேறு ஏதேனும் இடத்திற்கு பிரவேசிப்பதற்கு, வினவுவதற்கு மற்றும் கூற்றுக்ளைப் பெற்றுக் கொள்வதற்கு அத்துடன் எவரேனும் இனங்காணப்பட்ட திறத்தவர் அல்லது திறத்தவர்களிடமிருந்து வேறு எவையேனும் வகையினதான ஆவணங்களைக் கையாளுவதற்கு மற்றும் ஆய்வு கூடத்தினால் தேயிலையின் தரத்தினை நுண்ணாய்வு செய்யும் நோக்கத்திற்காகவும் விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காவும் மாதிரி எடுத்தலுக்கு சமுகமளிப்பதற்கும் இவ்வொழுங்குவிதிகளின் கீழ் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

5. சபையானது தேயிலைத் தொழிலின் தொழிற்பாட்டு செய்றபாடுகளை சோதித்த பின்னரும் கமில்லியா சினென்சிஸ் எல் ( Camellia sinensis - L) என்னும் தாவரத்திலிருந்து தயாரிக்கப்பட்ட அல்லது பெறப்பட்ட தேயிலை மாதிரிகள் மற்றும் பின்வரும் நோக்கங்களுக்காக தேயிலையின் இறுதி உற்பத்திப் பொருள்மீதான தயாரிப்பில், உற்பத்தியில், செய்முறைப்படுத்தலில் அல்லது பரிகரிப்பில் பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்துவதற்கு உட்கருதப்படும் என சந்தேகிக்கப்பட்ட வேறு ஏதேனும் உற்பத்திப் பொருளை அல்லது வேறு ஏதேனும் மூலப்பொருளை அல்லது பதார்த்தத்தை பரிசோதித்து அல்லது பகுப்பாய்வு செய்த பின்னரும் சான்றிதழ்களை அல்லது பகுப்பாய்வு அறிக்கைகளை வழங்குதல் வேண்டும்.

(அ) உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட அல்லது சந்தைப்படுத்தப்பட்ட அல்லது வழங்குகைக்காக தயார்படுப்பட்ட தயாரிக்கப்பட்ட தேயிலைகள் அல்லது சர்வதேச ரீதியாக தரப்படுத்தும் நோக்கத்திற்காக, தாபிக்கப்பட்டதும் சபையில் ஏற்புறுதி செய்யப்பட்டதுமான நிறுவனங்களினால் தேயிலைக்காக விதிக்கப்பட்ட இரசாயன நியமங்களிற்கு ஒருங்கிசைந்திருக்கின்றதா எனத் தீர்மானிப்பதற்கும்;

(ஆ) தேசிய ரீதியாக அல்லது சர்வதேச ரீதியாக தாபிக்கப்பட்ட நிறுவனங்களினால் விதிக்கப்பட்டதான நிலைநாட்டப்பட்ட முறைகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டதேயிலைகளில் நுண்ணுயிரியல் மாசு, பூச்சித் தொற்று, ஒவ்வாதபொருள் மற்றும் வேறு ஏதேனும் மாசுக்கள் என்பவற்றின் உள்ள உள்ளடக்கத்தின் இருப்பைத் தீர்மாப்பதற்கும்;

(இ) தயாரிக்கப்பட்ட தேயிலையில் கண்டுபிடிக்கப்பட்ட பீடைகொல்லிகளின் எச்சங்கள் மற்றும் வேறு இரசாயனப் பதார்த்தங்கள் பின்வருவனவற்றுடன் இணங்கியொழுகுகிறதா என்பதனைத் தீர்மானிப்பதற்கும்-

(i) தேயிலைச் ஆராய்ச்சி நிறுவகத்தினால் அல்லது இலங்கையின் இயைபான வேறு அரசாங்க ஒருங்கமைப்புக்களினால் அல்லது நிறுவனங்களினால் குறித்துரைக்கப்பட்ட பீடைகொல்லிகள் மற்றும் வேறு இரசாயன பதார்த்தங்கள்

(ii) தேயிலை நுகரும் நாடுகளின் இயைபான உள்ளூர் அதிகாரிகளினால் அல்லது சர்வதேச குழுக்களினால் விதிக்கப்பட்ட பூச்சிகொல்லிகளின் அதிகபட்ச எச்ச வரம்புகள் (அஎவ) மற்றும் வேறு இரசாயன பதார்த்தங்கள்;

(ஈ) தயாரிக்கப்பட்ட தேயிலை ஆனது மனித நுகர்விற்குப் பொருத்தமானதா என்பதனை சான்றுப்படுத்துவதற்கு;

(உ) தேயிலை தொழில் மற்றும் தேயிலை நுகர்வோர்களுடன் தொடர்புபட்ட தேயிலை உற்பத்தியாளர்களின், தேயிலை தரகர்களின், தேயிலை ஏற்றுமதியாளர்களின், தேயிலை இறக்குமதியாளர்களின், தேயிலை கொள்வனவாளர்களின் அல்லது தேயிலை விற்பனையாளர்களின் அல்லது வேறு எவரேனும் திறத்தவர்களின் அலுவலக தேவைப்பாடு மீது தாயாரிக்கப்பட்ட தேயிலையின் வேறு ஏதேனும் தர அளவுருவைப் பரிசோதிப்பதற்கும், பகுப்பாய்வு செய்வதற்கும் மற்றும் சான்றுப்படுத்துவதற்கும்;

(ஊ) சபையின் முன் அங்கீகாரத்துடன் உற்பத்தி செய்யப்பட்ட எஞ்சிய தேயிலை அல்லது தயாரிக்கப்பட்ட தேயிலையின் அடிப்படையில், ஒன்றில் திரவ அல்லது திண்ம வடிவத்தில் குடிப்பதற்கு தயாரான அல்லது வேறு ஏதேனும் உற்பத்தி பொருட்களிலான பதார்த்தங்கள் மற்றும் மாசுபடுத்திகளை தீர்மானிப்பதற்கு;

(எ) பாவனைக்கு தயாராகவுள்ள செயற்கையான அல்லது இயற்கையான சேர்மானப் பொருட்களைக் கொண்ட தேயிலையின் பரிசோதனை மூலமும் பகுப்பாய்வு மூலமும் தேவைப்படுத்தப்பட்ட நியமங்களை தயாரிக்கப்பட்ட தேயிலை நிறைவேற்றுகின்றதா என தீர்மானிப்பதற்கும்;

(ஏ) தயாரிக்கப்பட்ட தேயிலையினை உற்பத்தி செய்வதில், தயாரிப்பதில் செய்முறைப்படுத்துவதில் அல்லது பரிகரிப்பதில் பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்துவதற்கு உட்கருதப்பட வேண்டியதாக சந்தேகிக்கப்பட்ட ஏதேனும் மூலப்பொருளை அல்லது பதார்த்தத்தை பரிசோதிப்பதற்கும் தீர்மானிப்பதற்கும்;

(ஐ) சபையினால் விதிக்கப்பட்ட பகுப்பாய்வுகள் மற்றும் தர அளவீடுகளின் குறைந்தபட்ச நியமங்கள் கீழ் தயாரிக்கப்பட்ட தேயிலைகளை சான்றுப்படுத்துவதற்கு;

(ஓ) அனுப்பும் வரை அல்லது கப்பலேற்றும் வரை சுகாதார ரீதியிலான இறுதித் தேயிலை உற்பத்திப் பொருளிற்கு இணங்க அதிகாரமளிக்கப்பட்ட வசதிகளின் தொழிற்பாட்டு செயற்பாடுகளை சான்றுப்படுத்துவதற்கு.

6. இவ்வொழுங்குவிதிகள் ஏற்பாடுகளை மீறுகின்றவரும் மற்றும் தெரிந்தும் பொய்யான அல்லது செம்மையற்ற தகவலைக் கொடுத்திருக்கின்றவரும், சபைக்கு செம்மையற்ற மாதிரிகளை வழங்குகின்றவருமான எவரேனும் ஆள் 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின்கீழ் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும்.

7. இவ்வொழுங்குவிதிகள் ஆய்வுகூடத்தின் சேவைகளை பெறுகின்றவருமான ஒவ்வொரு ஆளிற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

8. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்திற்காக-

''சேர்மானப்பொருட்கள்'' என்பது, ஏதேனும் உணவிற்கு சேர்க்கின்றதும், உணவினை நொதிக்க வைத்தல், அமிலமாக்கல் அல்லது வேறு சிதைவடையச் செய்தல் செய்முறையை தடுக்கின்ற, ஒழுங்குகின்ற அல்லது கவருகின்ற ஆற்றலுடையதுமான பதார்த்தங்கள் எனப் பொருள்படும்;

''அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்'' என்பது, இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்காக சபையினால் பணிப்பக்கப்பட்டவாறு கடமைகளை நிறைவேற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்;

''ஒவ்வாத பொருள்'' என்பது, ஒன்றில் இலக்குக் குறிக்கோளில் தீங்குவிளைவிக்கக் கூடியதாக அல்லது அவ்வாறாக இல்லாதனவான புறம்பான பதார்த்தம் அல்லது பதார்த்தங்கள் எனப் பொருள்படும்;

''தரப்படுத்தலுக்கான சர்வதேச ஒழுங்கமைப்பு'' என்பது, கணித்தல் மற்றும் தொடர்பாடல் உட்பட பல வியாபாரங்களில் மற்றும் தொழில்நுட்பவியல்களிலான தரங்களை அமைக்கின்றதான ஒழுங்கமைப்பு எனப் பொருள்படும்;

''பூச்சி மொய்த்தல்'' என்பது, தொடர்ச்சியாக அல்லது பெருமளவான எண்ணிக்கை பூச்சிகள் வாழ்கின்றமை மற்றும் அதனால், உயிர் வாழ்கின்ற அல்லது இறந்த பூச்சிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் அல்லது இறந்த பூச்சிகள் அல்லது அவற்றின் கழிவுகள் மூலம்

இலக்கு குறிக்கோள்களை சேதப்படுத்துகின்றமை எனப் பொருள்படும்;

''உள்ளூர் அல்லது சர்வதேச நியமங்களும் வழிகாட்டு நெறிகளும்'' என்பது, காலத்திற்குக்காலம் ஏற்றுக்கொள்ளப்பட்டதான அல்லது மீளாய்வு செய்யப்பட்டதான எல்லா உள்ளூர் மற்றும் சர்வதேச நியமங்களும் வழிகாட்டு நெறிகளும் எனப் பொருள்படும்;

''தயாரிக்கப்பட்ட தேயிலை'' என்பது, 1975ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க இலங்கைத் தேயிலைச் சபை சட்டத்தில் அதற்கு குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் எனப் பொருள்படும்;

''அதிகபட்ச எச்ச வரம்பு (அஎவ), என்பது, (Codex Alimetarious Commission) கொடெக்ஸ் அலிமெட்ரேறியஸ் ஆணைக்குழுவினால் அல்லது தேசிய ஒழுங்குபடுத்தும் அதிகார சபையினால் தரப்பட்டவாறான உணவு, விவசாய உற்பத்திப் பொருள் அல்லது விலங்குணவு ஆகியவற்றில் அல்லது அவைமீது ஏற்றுக் கொள்ளப்படற்பாலதான சட்டரீதியாக அனுமதிக்கப்பட்டதான அல்லது அங்கீகரிக்கப்பட்டதான பீடை கொல்லிகளின் அதிகபட்ச எச்சசெறிவு மற்றும் வேறு இரசாயனப் பதார்த்தம் எனப் பொருள்படும்;

''நுண்ணுயிரியல் மாசுக்கள்'' என்பது, ஆபத்தான அல்லது நோய்காவும் நுண்ணுயிரிகளை சேர்ப்பதன் மூலம் தூய்மையற்றதாக தயாரிக்கப்பட்டுள்ள ஏதேனும் பதார்த்தம் எனப் பொருள்படும் ;

'' பீடை '' என்பது, நேரடியான அல்லது மறைமுகமான செயற்பாடு ஊடாக பயிர்களுக்கு மற்றும் அறுவடைக்கு சேதம் விளைவிக்கும் நட்டத்தை ஏற்படுத்தும் உயிரினம் எனப் பொருள்படும் ;

''பூச்சிகொல்லிகள்'' என்பது, ஏதேனும் பூச்சியை கட்டுப்படுத்துவதற்கு, தடுப்பதற்கு, அழிப்பதற்கு, விரட்டுவதற்கு மற்றும் தணிப்பதற்கு உட்கருதப்பட்ட பதார்த்தங்கள் எனப் பொருள்படும்.

10-255

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.